


34 ஆவது ஆண்டில்
விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
Tel: 416-282-8059 www.vlambaram.com
email: vlambaram@sympatico.ca www.tamilvanakkam.com




நதி: 34 பாலம்: 02 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் JANUARY 15, 2024

# சர்வதேச சட்டத்தின் முக்கிய அமைப்பு சர்வதேச நீதிமன்றம்!

சர்வதேச நீதிமன்றத்தை (International Court of Justice) சர்வதேச சட்டத்தின் முக்கிய அமைப்பாக கனடிய அரசாங்கம் ஆதரிக்கிறது. இவ்வாறு ஆதரிப்பது இஸ்ரேலுக்கு எதிராக தென்னாபிரிக்கா கொண்டுவந்த இனப்படுகொலைக் கோரிக்கையை கனடா ஆதரிப்பதாக அர்த்தமல்ல என்று கனடியப் பிரதமர் ஜஸ்ரின் ரூடோ 2024 ஜனவரி 12இல் ஊடகவியலாளர்களது கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போது கூறினார்.



Barrister Malcolm Shaw speaks on behalf of the Israeli delegation at the International Court of Justice.
Thanks: Michel Porro/Getty Images

ஒன்ராறியோ மாகாணத்தில் உள்ள Guelph நகரில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கனடியப் பிரதமர் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போது, "சர்வதேச சட்டம் மதிக்கப்படுவதையும் செயல்படுத்தப்படுவதையும் உறுதி செய்வதற்காக கடந்த பல தசாப்தங்களாக உருவாக்கப்பட்டுள்ள கட்டமைப்புகளுக்கும் சர்வதேச விதிகள் அடிப்படையிலான ஒழுங்கு முறையிலான செயல்முறைகளுக்கும் கனடா நீண்ட காலமாக ஆதரவாக இருந்து வருகிறது. இதன்மூலமே சர்வதேச சட்டம் மதிக்கப்படுவதையும், செயல்படுத்தப்படுவதையும் உறுதிசெய்ய முடியும். சர்வதேச நீதிமன்றம் (ICJ) இதன் முக்கிய பகுதியாகும். சர்வதேச நீதிமன்றத்திற்கும் அதன் செயல் முறைகளுக்கும் கனடிய அரசாங்கம் முழுமனத்துடன் ஆதரவு தெரிவிக்கிறது. இவ்வாறு சர்வதேச நீதிமன்றத்தையும் அதன் செயல்முறைகளையும் ஆதரிப்பது சர்வதேச நீதிமன்றத்தில் தென்னாபிரிக்காவால் முன் வைக்கப்பட்ட வழக்கினை ஆதரிப்பதாக அர்த்தமல்ல" என்று கூறினார்.

அதே தினம் மாலையில் வெளியுறவு அமைச்சர் மெலனி ஜோலி ஊடகங்களுக்கு விடுத்த அறிக்கையில் கனடியப் பிரதமர் ஜஸ்ரின் ரூடோவின் கருத்துகளை மீண்டும் வலியுறுத்தி கூறியிருந்தார். "சர்வதேச நீதிமன்றத்தில் நடந்துவரும் வழக்கை கனடா மிகவும் உன்னிப்பாகக் கவனிக்கும். ஐ.நா.வின் 1948 இனப்படுகொலை மாநாட்டின் (Genocide Convention) கீழ் இனப்படுகொலைக் குற்றத்திற்கு ஒரு குழுவை (Group), அவர்களின் தேசியம் (Nationality), கலாசாரம் (Ethnicity), இனம் (Race) அல்லது மதம் (Religion) ஆகியவற்றின் காரணமாக அவர்களை முற்றாக அழிக்கவோ அல்லது ஓரளவு அழிக்கவோ மற்றைய குழுவிற்கு எண்ணம் (Intenion) இருந்தது என உறுதிப்படுத்த வேண்டும். இவ்வாறு உறுதிப்படுத்துவது இலகு அல்ல. இதற்கு உறுதியான பல சான்றுகள் தேவை" என அவ் அறிக்கையில் அமைச்சர் மெலனி ஜோலி தெரிவித்திருந்தார். அவர் மேலும் அவ் அறிக்கையில், "இந்த வழக்கின்போது முன் வைக்கப்படும் விவாதங்கள் யூத மக்கள், யூத வணிக நிறுவனங்கள் மற்றும் யூத வணக்கத்தலங்களுக்கு எதிராக வன்முறையைத் தூண்டப் பயன்படுத்தப்பட மாட்டாது என்பதை நாம் உறுதி செய்ய வேண்டும். அதே நேரத்தில் இஸ்லாமிய வெறுப்பு மற்றும் அரேபிய எதிர்ப்பு உணர்வுகள் ஏற்படாதவாறும் நாம் பார்த்துக்கொள்ள வேண்டும்" எனவும், "காஸாவில் மனிதாபிமான நெருக்கடியின் அளவு குறித்து கனடா ஆழ்ந்த அக்கறையுடன் இருப்பதாகவும், நிலையான போர் நிறுத்தத்தைப் பெறுவதற்கான அவசர சர்வதேச முயற்சிகளை கனடா ஆதரிப்பதாகவும்" தெரிவித்திருந்தார்.

அத்துடன் "நிலையான போர் நிறுத்தம் என்பது ஒருதலைப்பட்சமாக இருக்க முடியாது. ஹமாஸ் அனைத்துப் பயணக் கைதிகளையும் விடுவிக்க வேண்டும். பாலஸ்தீனிய பொதுமக்களை மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்துவதை நிறுத்த வேண்டும் மற்றும் அதன் ஆயுதங்களைக் கீழே வைக்க வேண்டும்" எனவும் அவர் தெரிவித்திருந்தார்.

சர்வதேச நீதிமன்றம் (ICJ) என்பது ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பு நாடுகளுக்கிடையேயான பிரச்சினைகளில் தீர்ப்பளிக்கக்கூடிய மிக உயர்ந்த ஐக்கிய நாடுகளின் கட்டமைப்பாகும். இது தனி நபர்களின் குற்றவியல் வழக்குகளை

தொடர்ச்சி 05 பக்கம்





சட்டச் சேவை
டிராஃபிக் டிக்கெட்டால் சட்டப்பிரச்சினையா?
அழையுங்கள்: Licensed Paralegal
வினோத்குமார், BA LLB LLM Candidate
(Osgoode Law School) 647–766–5189














BUILD YOUR ESTATE STYLE CUSTOM HOUSE
READY TO BUILD
LAND
FOR SALE
IN THE DURHAM & GTA
Full Home Designs — Fully Insured, Customer Focused, Outstanding Design Team Here To Support Your Dream Home.
Only
$699K




HOUSE
FOR RENT
Warden &
401/Sheppard
Bright living & dining room with walkout to south facing patio & fenced yard. Nice hardwood floors, eat-in kitchen with stainless steel appliances. Spacious bedrooms, Partially finished basement with new broadloom, fresh paint, cozy wood burning fireplace & extra bath with separate shower. Plenty of space to make room for the extended family.
PROPERTY FEATURES
• Living Room • 2 Bathroom
• Dining Room • Smoke and pet free home
• 3 Bedroom • Bungalow House
APARTMENT FOR RENT
Enjoy Brand New Never Lived In Immaculate 2 Bedroom, 2 Bathroom Suite In Luxury Condo In Prime Scarborough Location. Excellent Location, Minutes To TTC, Highway 401, Go Train
FACILITIES
MORE INFORMATION
647- 296- 0596
www.ParaCity.ca
KENNEDY & 401




HOME FOR SALE
PRIDE OF OWNERSHIP!
Custom Home over 5000 sq ft
RICHMOND HILL
TORONTO
TORONTO
OSHAWA
OFFICE USE
You're in the right place for real estate!
Book Now
647-296-0596
www.ParaCity.ca




FOR SALE
New Brunswick
CUSTOM HOME
ONLY
1.4M
6500 SQ.FT
HOUSE
For Your Beloved Family




Get in Touch
Para Tisikulasingam
Real Estate Agent
HomeLife/GTA Realty Inc.
Brokerage*
HOMELIFE
HIGHER STANDARDS
Raja Mahendran
Broker/Owner
HomeLife/GTA Realty Inc.
Brokerage*
(647) 296-0596
HOMELIFE/GTA REALTY INC., BROKERAGE*
Independently owned & operated
5215 Finch Ave E #203, Scarborough, ON M1S 0C2
O : 416.21.6969 | F: 416.321.6963
(416) 321-6969



Available Till Midnight
Including Weekends & Holidays

ANTON
DHARMASEELAN
MORTGAE AGENT

#1 Mortgage Agent in GTA
#2 in Canada

CALL ME FIRST
FOR ALL YOUR MORTGAGE NEEDS

PURCHASE
REFINANCE
SELF EMPLOYED
BAD CREDIT
INVESTMENT PROPERTY
RENEWAL

MAJOR BANKS
ALTERNATIVE LENDERS
B LENDERS
CREDIT UNIONS
TRUST COMPANIES
PRIVATE LENDERS

416 704 1200

anton@myhomemls.ca

MORTGAGE ALLIANCE
Broker # 10530
#200, 2005 Sheppard Ave. E.
Toronto, ON M2J 5B4

FAX: 1 866 566 3068

# கண்ணையும், கருத்தையும் கவரும் பட்டத் திருவிழா!

**வல்வை, ந. அனந்தராஜ்**

"பட்டம்" அல்லது "காத்தாடி" என அழைக்கப்படும் பட்டங்களை வானில் பறக்கவிடுதல், இலங்கையில் 19ஆம் நூற்றாண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு கலை வடிவமாகும். இயந்திரத்தின் துணையின்றி காற்றின் விசையால் உந்தப்பட்டு மேலே பறக்கும் பாரம் குறைந்த பொருட்களினால் செய்யப்பட்ட ஒரு விளையாட்டுப் பொருளாக இரசிக்கப்படும் வகையில் பறக்கும் உருவங்களையே பட்டம் என்பர்.



சதுரத்தட்டிப் பட்டம்

வாடைக் காற்று வீசும் காலங்களில் இலங்கையின் வடபகுதியில், இடம்பெறும் பட்டம் ஏற்றும் போட்டிகளில் பல்வேறு விதவிதமான, வினோதமான நூற்றுக் கணக்கான பட்டங்களை வானில் பறக்க விடுவது அழகாக இருக்கும்.

சீனர்களினால் அறிமுகப்படுத்தப்பட்ட பட்டக் கலையானது இலங்கைக்கும் அறிமுகப்படுத்தப்பட்டு, ஈழத்துக் கலை, கலாசாரப் பின்னணியைக் கொண்டதாகப் பல்வேறு வண்ண வடிவமான பட்டங்களாக வானில் பறக்க விடப்படுகின்றன. பட்ட மேற்றுதல், அவற்றின் பொழுது போக்கு நலன் மற்றும் மக்களின் ஆதரவு கருதி புதிய வகைகளில் தொழில்நுட்பத் திறன்களை வெளிப்படுத்தும் வகையிலான பட்டங்களை அறிமுகப்படுத்துவதற்காகவும், இளைஞர்களிடையே ஆக்கத்திறன் சிந்தனையை வளர்ப்பதற்காகவும் "பட்டப் போட்டிகள்" பாரிய அளவில் இடம்பெறத் தொடங்கின.

வடமராட்சியில் உள்ள வல்வெட்டித்துறை உதயசூரியன் உல்லாசக் கடற்கரையில் வாடைக்காற்று வீசும் காலங்களான டிசெம்பர், ஜனவரி மாதங்களில் இடம் பெற்றுவரும் பட்டத் திருவிழாவில் ஒவ்வொரு வருடமும் சுமார் எழுபத்தைத் திற்கும் மேற்பட்ட பல்வேறு வகையான,



வௌவ்வால் பட்டம்

நவீனத்துவமான பட்டங்கள் பறக்க விடப்படுகின்றன. இவ்வாறு வானில் பறக்க விடும் பட்டங்களில் சிறந்த கலைநுட்பம், நீண்டநேரம் வானில் பறந்து கொண்டிருக்கும் தன்மை, அழகு, தொழில் நுட்பத்திறன் என்பன நடுவர்களினால் மதிப்பீடு செய்யப்பட்டு, அவற்றில் மிகச் சிறந்த பட்டங்கள் தெரிவுசெய்யப்பட்டு பெறுமதியான பரிசுகளும் வழங்கப்படுகின்றன.



ஓணான் பட்டம்


பொழுதுபோக்கு விடயமாகவே பயன் படுத்தப்பட்டுவந்த பட்டங்களை, ஒரு கலை வடிவமாக மாற்றி, பட்டப் போட்டிகளை, நடத்தி பட்டத் திருவிழாவாகக் கொண்டாடி வருகின்றனர். வல்வெட்டித் துறையில் நடைபெற்று வரும் இப்பட்டப் போட்டிகள், ஏற்கனவே வல்வெட்டித்துறை சனசமூக சேவா நிலையத்தினரால் 1995இல் இருந்து சில வருடங்கள் நடத்தப் பட்டாலும் பின்னர் ஏற்பட்ட போர் மற்றும் இடப்பெயர்வுகள் காரணமாக சில காலம் இடைநிறுத்தப்பட்டிருந்தது.

அதன்பின்னர் 2011ஆம் ஆண்டில் இருந்து உதயசூரியன் விளையாட்டுக் கழகம் மற்றும் விக்னேஸ்வரா சனசமூக நிலையம் என்பன இணைந்து அதனை உதயசூரியன் கடற்கரையில் நடத்தி வருகின்றனர். வாடைக்காற்று வீசும் காலமான, தைப்பொங்கல் திருநாளான ஜனவரி மாதம் 14ஆம் அல்லது 15ஆம் திகதிகளில் தொடர்ச்சியாக ஒவ்வொரு வருடமும் பட்டமேற்றும் விழா கொண்டாடப்பட்டு வருவதால், இதைக் கண்டுகளிப்பவர்களின் தொகையும் அதிகரித்து வருகின்றது. இதனைக் கண்டுகளிப்பதற்காக வடக்குக் கிழக்கு மாகாணங்கள் மற்றும் தென்னிலங்கையில் இருந்தும், புலம் பெயர்ந்த நாடுகளில் இருந்தும் சுமார் 50,000இற்கும் மேற்பட்டோர் வருகைதந்து கண்டு களித்துச் செல்லும் அளவிற்கு இலங்கையிலேயே புகழ்பெற்ற ஒரு தேசிய விழாவாக அமைந்துள்ளது.



இரட்டைக் கொக்குப்பட்டம்

இப்பட்டப் போட்டிகளில், பல்வேறு வகையானதும், நவீனத்துவமும், கலைத் திறனும் கொண்டதுமான பட்டங்கள் வானில் பறக்க விடப்படும்பொழுது வானில் பூத்திருக்கும் பூங்காவாகவே வல்வெட்டித்துறை காட்சி அளிக்கும். இவ்வாறு வானில் பறக்கவிடும் பட்டங்களில் சிறந்த கலை நுட்பம், நீண்ட நேரம் பறக்கும் தன்மை, அழகும், அலங்காரமும், அறிவியல் தொழில்



தாஜ்மகால் பட்டம்

நுட்பத்திறன் என்பவை நடுவர்களினால் மதிப்பீடு செய்யப்பட்டு, அவற்றில் 20 பட்டங்கள் தெரிவு செய்யப்பட்டு அவற்றுள் சிறந்த பட்டங்களுக்குத் தங்கப் பதக்கங்களும் ஏனையவற்றிற்கு பெறுமதி யான பரிசுகளும், பணப் பரிசுகளும் வழங்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு பறக்கவிடப்படும் ஒவ்வொரு பட்டமும் ஒரு அடி உயரத்தில் இருந்து, 30 அடி உயரம்வரை அமைக்கப்பட்டிருக்கும்.

பட்டத்திருவிழாவில் இடம்பெற்ற சில வகையான பட்டங்கள்:

1. இரு பரிமாணத் தோற்றமுள்ள பட்டங்கள்: சாதாரணமாக இரு பரிமாண பட்டங்கள் என்பது நீளம், அகலம் ஆகியவற்றை மட்டுமே கொண்டதாக இருக்கும். குறித்த அளவு பிர மாணங்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட பட்டத்திற்கு உச்சி கட்டுவது (பட்டம் ஏற்றும் நூலை பட்டத்துடன் இணைத்து கட்டும் இடம்) இவ்வாறான நுட்பமான வேலைகள் செய்து அதனை வானத்தில் பறக்க விடுவர்.

- சதுரப்பட்டம் (படலம்), வௌவால், மூன்று மூலைப் பட்டம், கொக்கு, பருந்து, கட்டுக்கொடி, மனித எலும்புக் கூடு வடிவ பட்டம்

சதுரத் தட்டிப்பட்டம்
வௌவால் பட்டம்
இரட்டைக் கொக்குப் பட்டம்
பிராந்துப் பட்டம் (பருந்து)

2. முப்பரிமாணத் தோற்றத்தைக் கொண்ட பட்டங்கள்: முப்பரிமாணம் கொண்ட பட்டம் கட்டும்போது அதில் நீளம், அகலம், தடிப்பு என்பனவற்றைக் கொண்டதாக அமைக்கப்படும். இதில் பல நுணுக்கங்கள் கையாளப்படுவதுடன் இயங்கு நிலையில் பறக்கும் வகையில் காற்றின் வலு மூலமே இவை பறக்க விடப்படுகின்றன.

- மீன்பிடி வள்ளமும் என்ஜினும் (இணைந்த இயந்திரம்), மாட்டுவண்டி, குதிரைவண்டி, சுழலும் பெட்டிக் கொடி, றோலர் (ஆழ்கடல் மீன்பிடிக்குப் பயன்படுத்துவது), பெட்டிக் கொடி, கரம்சுண்டல் வண்டி, இரண்டு தலை ட்ரகன், ரோபோ, தேர்க்கப்பல். குருதி உறிஞ்சும் வௌவால், கடவுள்களின் உருவங்கள் பொறித்த பட்டங்கள், போன்றன.



அன்னப்பட்டம்

ஓணான் பட்டம் தாஜ்மகால் பட்டம்

பெட்டிப் பட்டம் அன்னப் பட்டம்



தவில் நாதஸ்வரக் குழுவினர்

இந்து தெய்வங்கள் - முருகன், பிள்ளையார் றொக்கற் பட்டம்

மனித உருவைத் தாங்கிய பெட்டிப்பட்டம் கடற்கன்னிப் பட்டம்

பறப்பதற்குத் தயாராக உள்ள அன்னப் பட்டம் ஒற்றைத் திருக்கை வண்டி

(தொடர்ச்சி 08ஆம் பக்கம்...)

விளம்பரம்
VLAMBARAM
34ஆவது ஆண்டில்
பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலக பொறுப்பாளர்: சுதர்சினி D.
'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படும் 'விளம்பரம்' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.
Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com
www.tamilvanakkam.com
Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved

# சர்வதேச...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

விசாரிக்கும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை (ICC) விடத்தனியாக இயங்குவது ஆகும். சர்வதேச நீதிமன்றமும் (ICJ), சர்வதேச குற்றவியல் நீதிமன்றமும் (ICC) நெதர்லாந்தில் உள்ள Hague நகரில் உள்ளன.



சர்வதேச நீதிமன்றத்திற்கு 15 நீதிபதிகள் உள்ளனர். இவர்கள் ஐக்கிய நாடுகளின் பொதுச்சபை மற்றும் ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபை ஆகியவற்றில் நடைபெறும் தேர்தல் மூலம் நியமிக்கப்படுவர். இந்த நீதிபதிகளின் பதவிக்காலம் ஒன்பது ஆண்டுகளாகும்.

சர்வதேச நீதிமன்றத்தின் தீர்ப்பு இறுதியானது. அதை உறுப்பு நாடுகள் ஏற்க வேண்டும். இந்தத் தீர்ப்புக்கு ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பு நாடுகளால் மேன்முறையீடு செய்ய முடியாது. இவ்நீதிமன்றத்தின் முடிவை உறுப்பு நாடுகள் ஏற்று நடைமுறைப்படுத்தாவிட்டால், அந்த முடிவை செயல்படுத்த வேண்டிய பொறுப்பு ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபையைச் சார்ந்தது. ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபை உறுப்பினர்களாக 15 நாடுகள் உள்ளன. அவற்றில் ஐந்து நாடுகள் நிரந்தர உறுப்பினர்கள். அவர்கள் சீனா, பிரான்ஸ், ரஷ்யா, ஐக்கிய இராச்சியம் மற்றும் அமெரிக்கா ஆகும். இவர்களுக்கு வீற்றோ (Veto) உரிமை, அதாவது தனி ஒரு நாடாகவே பாதுகாப்புச்சபை உறுப்பினர்கள் எடுக்கும் முடிவை தடைசெய்யும் அதிகாரம் உண்டு. இதனால் சர்வதேச நீதிமன்றம் வழங்கும் தீர்ப்பை உறுப்பு நாடுகள் ஏற்று நடைமுறைப்படுத்தாவிட்டால், அந்த முடிவை செயல்படுத்த ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச்சபை எடுக்கும் தீர்மானத்தை அவற்றின் ஐந்து நிரந்தர உறுப்பினர் நாடுகளில் ஒன்று தனது வீற்றோ அதிகாரத்தைப் பாவித்து தடுக்கலாம். இதனால் சர்வதேச நீதிமன்றம் வழங்கும் தீர்ப்பை அமல்படுத்துவது இலகுவான காரியம் அல்ல.

தென்னாபிரிக்க அரசு 2023 டிசம்பர் 29ஆம் திகதி இஸ்ரேல் காஸா மீது நடத்தும் தாக்குதல்கள் "இனப்படுகொலைச் செயல்கள்" என சர்வதேச நீதிமன்றத்தில் இஸ்ரேலுக்கு எதிராக குற்றம்சாட்டி வழக்கைத் தாக்கல் செய்தது.

சர்வதேச நீதிமன்றம் இஸ்ரேலுக்கு எதிரான தென்னாபிரிக்காவின் இனப்படுகொலை வழக்கின் இரண்டு நாள் பொது விசாரணையை 2024 ஜனவரி 11இல் ஆரம்பித்தது.

உலகெங்கிலும் உள்ள பாலஸ்தீனியர்களும், பாலஸ்தீன ஆதரவாளர்களும் 10 ஆயிரத்திற்கு மேற்பட்ட குழந்தைகள் உட்பட 23 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்ட காஸாவின் மீதான பேரழிவுகரமான இஸ்ரேலின் இராணுவத் தாக்குதலை சர்வதேச நீதிமன்றம் நிறுத்தும் என நம்புகின்றனர்.

சர்வதேச நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று நடைபெற்று தீர்ப்பு வருவதற்குப் பல ஆண்டுகள் (நான்கு வருடங்கள் மட்டில்) எடுக்கும். ஆனால், இவ்வழக்கில் தென்னாபிரிக்க அரசு சர்வதேச நீதிமன்றம் காஸா மீதான இஸ்ரேலிய அரசின் இடைவிடாத குண்டுத்தாக்குதலை உடனடியாக நிறுத்த இடைக்கால உத்தரவை உடனடியாக வழங்கும்படி கேட்டுள்ளது. இவ்வாறான இடைக்கால உத்தரவை வழங்க சர்வதேச நீதிமன்றத்திற்கு சில வாரங்களே தேவைப்படும். ஆனாலும், அவ்வாறு ஓர் இடைக்கால உத்தரவை சர்வதேச நீதிமன்றம் வழங்கினாலும் அதை ஏற்றுக்கொள்வது இஸ்ரேலிய அரசில் மட்டுமே தங்கியுள்ளது. அவ்வாறான முடிவை இஸ்ரேலிய அரசு ஏற்று நடைமுறைப்படுத்தா விட்டால் அதை அமல்படுத்த ஐக்கியநாடுகளின் பாதுகாப்புச்சபை தீர்மானம் எடுக்க வேண்டும். அத்தீர்மானத்தை நிரந்தர உறுப்பினர் நாடுகளில் ஒன்றான அமெரிக்கா வீற்றோ செய்யச் சாத்தியக் கூறுகள் உண்டு.



Foreign Affairs Minister Mélanie

தென்னாபிரிக்கா மற்றும் இஸ்ரேல் இரண்டு நாடுகளும் அங்கம் வகிக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் 1948 இனப்படுகொலை ஒப்பந்தத்தை மீறி காஸாவில் இனப்படுகொலை குற்றத்தை இஸ்ரேல் செய்ததாக தென்னாபிரிக்கா சர்வதேச நீதிமன்றத்தில் குற்றம்சாட்டி வழக்குத் தாக்கல் செய்துள்ளது. இதில் காஸாவில் பாலஸ்தீனியர்கள் பெருமளவில் கொல்லப்பட்டது, குறிப்பாக குழந்தைகள் பெருமளவில் கொல்லப்பட்டது, பாலஸ்தீனியர்களினுடைய வீடுகள் அழிக்கப்பட்டது, அவர்களை வாழ்விடங்களை விட்டு வெளியேற்றியது, அவர்களைப் பலவந்தமாக இடப்பெயர்வுக்கு உள்ளாக்கியது, அவர்களுக்கு உணவு, தண்ணீர் மற்றும் மருத்துவ உதவிகளைத் தடை செய்தது, கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் குழந்தைகளின் உயிர்வாழ்விற்கான அத்தியாவசிய சுகாதாரச் சேவைகளை அழிப்பதன் மூலம் பாலஸ்தீனியப் பிறப்புகளைத் தடுக்கும் நடவடிக்கைகளை முன்னின்று செய்தது ஆகிய அனைத்தும் இனப்படுகொலை நடவடிக்கைகளாகப் பட்டியலிடப்பட்டுள்ளது.




தேவை ஏற்படின் ஒரு வழக்கு விசாரணை ஆரம்பமாகும் முன்னரே சர்வதேச நீதிமன்றம் அதற்கு வழங்கப்பட்டுள்ள "தற்காலிக நடவடிக்கைகளை" (Provisional measures) எடுக்கும் அதிகாரத்தின் கீழ் அவசர உத்தரவை வழங்க முடியும்.

தென்னாபிரிக்க அரசு சர்வதேச நீதிமன்றத்தை இந்த "தற்காலிக நடவடிக்கைகளை" வழங்கும் அதிகாரத்தைப் பயன்படுத்தி இஸ்ரேல் மேலும் குற்றங்களைச் செய்வதைத் தடுக்க அவசரமாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரியுள்ளது. அதில் இனப்படுகொலை உடன்படிக்கையின் கீழ் பாலஸ்தீனிய மக்களின் உரிமைகளுக்கு மேலும் கடுமையான மற்றும் சீர்படுத்த முடியாத தீங்கு விளைவிப்பதில் இருந்து பாதுகாப்பதற்கு இந்த "தற்காலிக நடவடிக்கைகள்" அவசியம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு ஒரு வழக்கை சர்வதேச நீதிமன்றத்தில் கொண்டு வந்ததற்காக தென்னாபிரிக்காவை கடுமையாக விமர்சித்துள்ள இஸ்ரேல் தாங்கள் சர்வதேச நீதிமன்றத்தில் இதை எதிர்த்து வாதிடுவோம் என்று உறுதியளித்துள்ளது. இஸ்ரேலிய அதிபர் Issac Herzog உட்பட பல இஸ்ரேலிய மூத்த அதிகாரிகள் இந்த வழக்கை சுத்த அபத்தம் (Preposterous) என்று கூறியுள்ளனர்.

காஸாவில் 23,000இற்கு மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டது இஸ்ரேல் தற்பாதுகாப்புக்காக நடத்திய தாக்குதலில் ஹமாஸ் தீவிரவாதிகள் பொதுமக்களை மனிதக் கேடயங்களாகப் பாவித்ததால் ஏற்பட்டது என்று இஸ்ரேல் வாதிட உள்ளது. அத்துடன் ஜனவரி 9ஆம் திகதி அமெரிக்க வெளியுறவு அமைச்சர் Antony Blinkenஇற்கு இஸ்ரேலிய அதிபர் Issac Herzog கூறுகையில், "சர்வதேச நீதிமன்றத்தில் சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் கீழ் எங்கள் உரிமையுடனான தற்காப்பை பயன்படுத்துவது பற்றி மிகவும் பெருமையுடன் இஸ்ரேல் தமது வாதங்களை முன்வைப்போம்" என்றார்.


இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு ஊடகங்களுக்கு விடுத்த அறிக்கையில், "சர்வதேச நீதிமன்றத்தின் முன் கபடத்தனமும் (hypocrisy) பொய்களும் முன்வைக்கப்பட்டுள்ளன. மனித குலத்திற்கு எதிரான குற்றங்களைச் செய்த கொலைகாரப் பயங்கரவாதிகளை இஸ்ரேல் எதிர்த்து போராடுகிறது. அவர்கள் படுகொலை செய்தனர், கற்பழித்தனர், எரித்தனர், உடல் உறுப்புகளை வெட்டினர் மற்றும் தலையைத் துண்டித்தனர்" எனத் தெரிவித்துள்ளார்.



தென்னாபிரிக்காவின் வழக்கிற்கு மலேசியா, துருக்கி, ஜோர்டான், பொலிவியா, மாலைதீவுகள், நமீபியா, கொலம்பியா, பாகிஸ்தான் மற்றும் இஸ்லாமிய நாடுகளின் அமைப்பின் (OIC) உறுப்பு நாடுகள் ஆதரவு தெரிவித்துள்ளன.

இஸ்லாமிய நாடுகள் அமைப்பில் 56 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளனர். அவர்கள் எல்லோரும் ஐக்கிய நாடுகள் சபை உறுப்பினர்கள்.

# கனடாவின் கல்வி வரலாறு




கடந்த இதழ் தொடர்ச்சி

மதத்தையும் மொழியையும் பரப்புவதன் மூலம் சுதேசிகளின் பண்பாடு, கலை, கலாச்சாரம் என்பனவற்றை அழித்துவிடலாம் என்பதனை ஐரோப்பியர் தங்கள் ஆயுதமாகக் கைக்கொண்டிருந்தனர். தங்கள் பண்பாட்டையும் மொழியையும் பரப்புவதற்கு சமய நிறுவனங்களின் வருகைக்கு ஆதரவும் அதற்கான நிதி உதவிகளையும் மேற்குலக நாடுகள் நல்கி வந்தன. மதத்தைப் பரப்புவதற்காக இவர்களோடு உறவாடவேண்டிய நிலைமை சமய நிலையங்களுக்கு இருந்தன. இவை பைபிளை வாசிப்பதற்கு எழுத்தறிவை ஊட்டுவதற்கு முயற்சித்தனர். இதனால் அவர்கள் தங்கள் மொழிக்கல்வியை விடுத்து ஆங்கிலம் அல்லது பிரஞ்சு மொழியைக் கற்கவேண்டியும் ஏற்பட்டது. பெற்றோரிடமிருந்து பிள்ளைகளைப் பிரித்து அவர்களைத் தனிமைப்படுத்தினர். விடுதிப்பாடசாலைகளில் தங்க வைத்து சமயத்தையும் மொழியையும் கற்றுக் கொடுத்தனர். பழங்குடியினரின் பாரம்பரிய தொழில்களில் ஈடுபடமுடியாத நிலையும் ஏற்படுத்தப்பட்டது. இவற்றோடு தங்கள் நிலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டமையால் பரம்பரை பரம்பரையாக மேற்கொள்ளப்பட்ட விவசாயத்தையும் கைவிட்டனர். வேறு வேலைகளை நாடவேண்டிய நிற்பந்தம் அவர்களுக்கு ஏற்பட்டதால் நகரங்களை நாடி இடம்பெயர்ந்தமை, அவர்களின் மொழியை இழந்தமை என்பன அவர்களிடையே பண்பாடு, வாழ்வியல், நடைமுறை என்பனவற்றில் மாற்றங்களை ஏற்படுத்தத் தொடங்கியது.

நியூ பிரான்சு எனப்படும் பிரதேசத்தில் பிரஞ்சு மிசனறிமாரினால் பிள்ளைகளைத் தங்கவைத்துத் தனிமைப்படுத்தப்பட்டிருந்தமைக்கான பதிவுகள் 1620ஆம் ஆண்டிலேயே காணப்பட்டுள்ளது. சமயத்தைப் பரப்புவதிலும், கல்வி கற்பிப்பதிலும் மிசனறி நிறுவனங்களே ஈடுபட்டுவந்துள்ளன.

தி றிகொலக் மிசனறியினர் இரண்டு வழிகளில் பழங்குடியினருக்குக் கல்வி புகட்டத் தீர்மானித்தனர். முதலாவது பிரஞ்சுக் குடியேற்றத்தை அதிகரித்து அதனோடு பழங்குடியினரை இணைத்து அவர்களை நாகரிகமுள்ளவர்களாக மாற்றுதல் என்பதனையும் இரண்டாவது வழிமுறையாக பிரஞ்சுநாட்டுப் பிரசைகளிடம் இருந்து பணத்தைப் பெற்றுத் தங்கியிருந்து கற்பதற்கான ஒரு விடுதிப் பாடசாலையை ஆரம்பித்தல் என்பனையும் திட்டமிடப்பட்டது எனினும் றிகொலேற்ஸ் மிசனறியினர் 1629இல் திரும்ப அழைக்கப்பட்டதால் அந்தத் திட்டம் கைவிடப்பட்டது. இதனால் பழங்குடியினரின் கல்வி மற்றும் வாழ்வியல் முன்னேற்றத்திற்கான பாதைகள் மூடப்பட்டதோடு அவர்கள் ஒதுக்கப்பட்டவர்களாகவே இருந்தனர். (LeClerq, 1881, pp. 110-111). பழங்குடியினருக்கான கல்வி வாய்ப்பு பிரஞ்சுநாட்டில் இருந்த றிகொலக் மிசனறி மேலாளர்கள் அது வெற்றியளிக்கவில்லை எனக்கருதியதால் மீள அழைத்துக் கொண்டனர் என்பதனை மில்லர் 1996இல் குறிப்பிட்டுள்ளமையும் கருத்திற்கொள்ள முடியும். இதற்கிடையே 1630இற்கும் 1640க்குமிடையே ஏற்பட்ட மிகப் பயங்கரமான மனித இனத்தைக் காவுகொண்ட கொடிய நோயினால் பழங்குடியினரில் குறிப்பாக மொகாவுக் மற்றும் கியூறன் இனக்குழுமத்தினரில் 75 விழுக்காட்டினரை இழந்துள்ளது (Hill, 2005, p. 144). இதில் குழந்தைகளைப்



பெற்றெடுக்கக்கூடிய 15க்கும் 40 வயதிற்கும் இடையேயானவர்களே இந்த உயிர்கொல்லி நோயினால் பாதிக்கப்பட்டவர்கள். இதனால் பாடசாலைகளைப் பொறுப்பேற்றுக்கொண்ட ஜேசு சபையினர் பெருந்தொகையான பிள்ளைகளுக்குக் கல்வி அறிவூட்ட முடியாமற்போனது எனக் கொள்ளப்படுகின்றது.

1680இல் நியூ பிரான்சில் பாடசாலைகளைப் பொறுப்பேற்றுக் கொண்ட ஜேசு சபையினர், பிரஞ்சு குடியேற்ற ஆளுனருக்கு தங்களிடம் ஒப்படைக்கப்படும் பழங்குடிப் பெண்பிள்ளைகளை குடும்பத் திறன்களில் கல்வியறிவூட்டி, பின்னர் அவர்களைப் பிரஞ்சுப் போர் வீரர்களான குடியேற்ற வாசிகளை மணந்துகொள்ள வாய்ப்பளிப்பதாக உறுதியளித்தனர். இதனை ஏற்றுக்கொண்ட பிரஞ்சு குடியேற்ற அரசாங்கமும் இவ்விதம் மணந்துகொள்ளும் பெண்களுக்கு ஶ்ரீதனம் கொடுக்கவும் முன்வந்தது. (Dickason, 1992, P. 171). இது அவர்கள் எதிர்பார்த்த அளவிற்கு வெற்றியைத் தரவில்லை.

1900க்கும் 1930க்குமான காலகட்டத்தில் கனடா முழுமையும் (1900-1930) 80 விடுதிப்பாடசாலைகள் இருந்துள்ளன. 1950களில் பழங்குடியினர் மாணவர்கள் மொத்த மாணவர்களில் ஆறாம் வகுப்பில் சித்தியெய்தியோரில் பத்தில் ஒருவராகக் காணப்பட்டார் என வரலாற்றாளர் டிக்சன் குறிப்பிடுகின்றார். 1894க்கும் 1908ஆம் ஆண்டுக்குமிடையே 28வீதமான மாணவர்கள் கசநோய் காரணமாக இறந்துள்ளனர் என அறிக்கைகள் எடுத்துக்காட்டுகின்றன. கூப்பர்த் தீவில் இருந்த பிள்ளைகளில் 40 விழுக்காட்டினர் படிப்பை முடித்து வீடு திரும்ப முன்னரே இறந்துபோயினர் என இந்திய விவகார பதிவேடுகள் காட்டுகின்றன எனப் போர்ணியர் (Fournier & Crey, 1997, P.58). என்பவர் குறிப்பிடுகின்றார். பழங்குடியினரின் பிள்ளைகள் தங்கியிருந்த விடுதிகள் தீயிட்டக் கொழுத்தப்பட்டு பெருந்தொகையான பிள்ளைகள் அழித்தொழிக்கப்பட்டனர். இவ்வித இன அழிப்புக்களில் இருந்து தப்பியவர்கள் ஒருசிலரே. இந்த நிகழ்வுகளை இன்றும் நினைவு கூருகின்றனர். விடுதிப் பாடசாலைகளில் இடம்பெற்ற கொடுமைகள் ஆய்வுகளின் மூலம் வெளியே தெரிய வந்தமையை அறிந்த முன்னைநாள் பிரதமர் ஸ்ரீபன் காப்பர் 2014இலும் இன்றைய பிரதமர் ஜஸ்ரின் ரூடோ 2019இலும் பகிரங்கமாக மன்னிப்புக் கோரியிருந்தனர் என்பது நாடறிந்ததே.

பழங்குடியினரின் பிள்ளைகளுக்கு கல்வி வாய்ப்பை ஏற்படுத்தி அவர்களை தொழிற்சாலைகளில் பணியாற்றக் கூடியவர்களாக ஆக்குவதற்கான கல்வியை அவர்களுக்கு வழங்குவதன்மூலம் எங்களது மக்களோடு சரிசமமாக பங்குகொள்ளுவதற்கு வாய்ப்பளிப்பதற்காகப் பணத்தைச் செலவிடுவது பொதுமக்களின் வெறுப்பை ஏற்படுத்தும் அவர்கள் இதனை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். எனவே பொதுப்பணத்தை பழங்குடியினரின் கல்விக்குச் செலவிடுவது பொருத்தமற்றது என உள்நாட்டு அலுவல்கள் அமைச்சராகவும் இந்திய விவகார அத்தியட்சகராகவும் இருந்த பிறாங் ஒலிவர் (1905-1911) குறிப்பிட்டுள்ளமை பழங்குடியினரின் கல்வி வாய்ப்பையும் தொழில்வாய்ப்பையும் திட்டமிட்டே ஒதுக்கியுள்ளனர் என்பது வெளிப்படை. கிறிஸ்தவ மிசனறிமாருக்கும் தேவாலயங்களுக்கும் கொடுக்கபட்ட நிதி உதவியினை நிறுத்தி பழங்குடியினரை பொதுப் பாடசாலை அமைப்பிற்குள் கொண்டுவர வேண்டும் என்னும் சிந்தனை முற்போக்குச் சிந்தனை கொண்ட அரசியலில் ஈடுபட்ட ஒரு சிலரின் கருத்தாகக் காணப்பட்டதன் காரணமாக பழங்குடியினரின் பிள்ளைகள் கல்வியைப் பெறும் வாய்ப்பை அளிக்க அரசாங்கம் முன்வந்தது. எனினும் கல்வி வளங்களை வழங்குவதில் பல்வேறு தடைகளையும் இடர்பாடுகளையும் எதிர்கொள்ளவேண்டிய நிலையும் காணப்படுகின்றது. தனியார் நிறுவனங்களான சமய சார்பான நிறுவனங்களிடம் பழங்குடியினரின் கல்வியை ஒப்படைத்திருந்தமை கல்வி வரலாற்றில் ஒரு கறைபடிந்த காலமாகும் என்பது உணரப்பட்டுள்ளது. இதனால் 1970 ஆண்டுடன் சமயசார்பான பாடசாலை களுக்கான பழங்குடியினரின் கல்விக்கான நிதிப்பங்களிப்பு நிறுத்தப்பட்டு இந்தியர்களே இந்தியர்களின் கல்வியைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க வேண்டும் என்னும் எண்ணக்கரு முன்வைக்கப்பட்டு நடைமுறைப் படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

கனடிய கல்வி வரலாற்றில் இந்த நாட்டின் ஆதிக்குடிகளின் கல்வி வளர்ச்சியில் மட்டுமன்றி ஆபிரிக்க அமெரிக்கர்களின் கல்வி வளர்ச்சியிலும் பல்வேறு சகிக்க முடியாத வெறுக்கத்தக்க நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளமை போன்று இரண்டாம் உலகப்போர் காலத்தில் கனடாவில் வாழ்ந்துவந்த பழங்குடியினரின் கல்வி தொடர்பான போக்கு பிரஞ்சுக்குடியேற்றப் பகுதிகளைப் போலவே ஆங்கிலேயக் குடியேற்றப் பகுதிகளிலும் இடம்பெற்றுள்ளன. சமயம் பரம்பும் நோக்கமே முன்னுரிமை பெற்றுள்ளது. ஆங்கிலத்தையோ அன்றி பிரஞ்சையோ பேச, எழுத கற்றுக் கொள்வதன்மூலம் தங்கள் மொழியையும் பண்பாட்டையும் சமயத்தையும் இலகுவாகப் பரப்பமுடியும் என்னும் எண்ணம் வலுவான ஆயுதமாகக் கைக்கொள்ளப்பட்டுள்ளது.

## விடுதிப் பாடசாலைகள்: பழங்குடியினரின் பிள்ளைகளுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள்

நியுபவுண்லாந்து, நியுபுறான்ஸ்விக். பிரின்ஸ் எட்வேட் தீவுகள் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் 139க்கு மேற்பட்ட பாடசாலைகள் இருந்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. இவற்றிற்காக ஏறத்தாழ 150,000 பிள்ளைகள் அவர்களது குடும்பங்களில் இருந்து பிரித்தெடுக்கப்பட்டு வதிவிடப்பாடசாலைகளில் தங்கவைக்கப பட்டிருந்தனர். 1970களில் பெரும்பாலான பழங்குடியினரின் பிள்ளைகளுக்கான வதிவிடப்பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. மத்திய அரசினால் நடத்தப்பட்ட இறுதியான பாடசாலை 1990இன் இறுதிப்பகுதியில் மூடப்பட்பட்டுள்ளது. தொடரும்...




# KOKUVIL HINDU COLLEGE
## OLD STUDENTS' ASSOCIATION CANADA

ESTD 1994

இரா போசன விருந்துடன்,
மாபெரும் இன்னிசை நடன நிகழ்வு

APRIL 6 2024

# மகுடம்
# MAHUDAM 2024



Metropolitan Center- Banquet Hall In Scarborough.
3840 Finch Ave E, Toronto, ON M1T 3T4

**கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் கனடா**

## நாமும் நமது இல்லமும் 646

# புதியவர்களின் வரவினால் ஆதன நிலையில் மாற்றம்



ராஜா மகேந்திரன், P.Eng.
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969



புதுமை பொங்க
அமைதி பொங்க
செல்வம் பொங்க
வளமை பொங்க
எனது இனிய பொங்கல் நல்வாழ்த்து.
- ராஜா மகேந்திரன்

மத்திய அரசின் அதிக எண்ணிக்கையான புதியவர்களின் உள்வாங்கல் கொள்கையினால், ஆதனத்தை கொள்வனவு செய்வதில் கனடியர்கள் பெருமளவு நெருக்கடியை எதிர்கொள்வார்கள் என இரண்டு வருடங்களிற்கு முன்பாக, Federal Public Servants மத்திய அரசிற்கு தனது நிலைப்பாட்டை தெரிவித்து இருந்தது. மக்களிற்குப் போதியளவு எண்ணிக்கையான ஆதனங்கள் நிர்மாணம் செய்யப்படுவதில்லை என்பதனையும் தெரிவித்து இருந்தது.

எனினும், கனடிய மத்திய அரசு 2025இல் 500,000 புதியவர்களை உள்வாங்குவது என தீர்மானித்துள்ளது. இந்தப் பெறுமதி 2015இன் உள்வாங்கிய புதியவர்களின் எண்ணிக்கையை விட இருமடங்காகும்.

அத்துடன் அதீத மக்கள் தொகை அதிகரிப்பு மக்களின் வாழ்வியல் முறையிலும், வாடகையிலும் பெருமளவு பாதிப்பு ஏற்படும் என்பதனையும் தெரிவித்து இருந்தது. அத்துடன் ஆப்கானிஸ்தான், உக்ரேன், பலஸ்ரைன் (Palestine) போன்ற நாடுகளில் ஏற்பட்டு கொண்டிருக்கும் போர்களினால் மேலதிக மக்களின் வருகையும் கனடாவில் தொழில் தேடுவதிலும் நெருக்கடியை ஏற்படுத்துகின்றது.

அத்துடன் அண்மைக் காலங்களில், அதிகளவிலான வெளிநாட்டு மாணவர்களின் வருகை, நிரந்தரமற்ற குடிவரவாளர்களின் வருகை (VISA / Temporary Residents), குறிப்பிட்ட காலத்திற்கு வந்து தொழில் புரிவோர் இது போன்றவற்றினாலும் இருப்பிட நெருக்கடி, அதனால் வாடகை அதிகரிப்பு, கனடியர்களின் வருமானத்தில் பெரும்பகுதி வாடகை அல்லது அடமானக் கடனிற்கு செலுத்த வேண்டியுள்ளது.

எனினும், ஆட்சியில் இருக்கும் லிபரல் அரசு, அதிக மக்களின் வருகையால் கனடாவின் பொருளாதாரம் வளருவதுடன், வயதானவர்களை இவர்களால் நிவர்த்தி செய்ய முடியும் எனத் தெரிவிக்கின்றது. எனினும், 2025 மற்றும் 2026இலும் புதியவர்களின் வருகை 500,000 இருக்கும் என அரசு தெரிவித்துள்ளது.

2024இன் ஆரம்ப ஆதன வியாபாரம், சற்று நிலை மாறுவதனைக் காணலாம். பொதுவாக ஆண்டு இறுதியில் சந்தைப் படுத்தப்படும் ஆதனங்கள் குறைவாகவே காணப்படும். 2023ஆம் ஆண்டு இதற்கு விதிவிலக்கல்ல.

ரொறொன்ரோ பெரும்பாகத்திலும் கனடாவிலும் 2023ஆம் ஆண்டின் ஆதன வியாபாரம் மிகவும் நெருக்கடியாகவே காணப்பட்டது. மொத்தமாக ரொறொன்ரோ பெரும்பாகத்திலும் அதனைச் சுற்றியுள்ள பகுதியிலும் 65,982 ஆதனங்களே கைமாறியுள்ளன. 2022இல் 75,140



ஆதனங்கள் கைமாறின. மேலும், 2021இல் 121,630 ஆதனங்கள் கைமாறின. 2021ஆம் ஆண்டே இதுவரையில் அதிக ஆதனங்கள் விற்று வாங்கப்பட்ட ஆண்டாக ரொறொன்ரோ பெரும்பாகத்தின் சரித்திரத்தில் குறிக்கப்பட்டுள்ளது. 2023 இல் சராசரி விலையில் பெரிய மாற்றம் ஏற்படவில்லை என்பதனையும் மிகவும் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டியுள்ளது. அதாவது கனடியர்கள் ஆதனத்தை நிச்சயமாக விற்கவேண்டிய நிலையில் இல்லை. அத்துடன் புதிதாக நிர்மாணம் செய்யும் நிறுவனங்களும் தமது புதிய வருகை மனைகள் தொகுதிகளை (New Condo Projects) பிற்போட்டுள்ளன.

2023இன் இறுதிகாலப் பகுதியில், பெறுமதியான ஆதனங்கள் சந்தைப்படுத்தப்பட்டிருந்த போதிலும் தகுந்த வாங்குநர்கள் கிடைக்காததால் பல ஆதனங்கள் 2023இன் இறுதிப் பகுதியில் சந்தையிலிருந்து உரிமையாளர்களால் அகற்றப்பட்டு இருந்தன.

இவை இப்பொழுது மீண்டும் சந்தைப் படுத்தப்படுவதனைக் காணலாம். அத்துடன் பல விற்கப்பட்டும் உள்ளன. நீண்டகால அடமானக் கடனில் இப்பொழுது ஏற்பட்ட இறக்கமும், வாங்குவோரிற்கு சாதகமாகத் தெரிகின்றது.

அடுக்குமாடி மனைகளில், முதலீட்டாளர்களின் நாட்டம் பெரியளவில் குறைந்துள்ளது. மேலும், பல முதலீட்டாளர்கள், தம்மிடம் இருக்கும் அடுக்குமனைகளை இப்பொழுது விற்பதனையும் காணலாம்.

இதற்கு தகுந்த வாடகையாளர்களை தமது ஆதனத்திற்குத் தெரிவு செய்வதிலும், அரசுகளின் வாடகையாளர்களின் மேலதிக சார்புக் கொள்கைகளும் முதலீட்டாளர்கள், ஆதன முதலீட்டை தவிர்த்து வேறுவிதமான முதலீடுகளை நோக்கி நகர்வதனைக் காணக்கூடியதாக உள்ளது.

டிசெம்பர் 2023, அடுக்குமனை வியாபாரம் ரொறொன்ரோ பெரும்பாகத்தின் வியாபார சரித்திரத்தில் குறைவாகக் காணப்பட்டது. ஜனவரி 2021இற்கு பிற்பாடு, டிசெம்பர் 2023, முதல் தடவையாக, ரொறொன்ரோவின் மத்தியபகுதியில் சராசரியாக ஒரு சதுரஅடியின் விலை $1000 ($997 சதுரஅடி) இற்கு சற்று குறைவாகக் காணப்பட்டது.

2022 பெப்ரவரியில் இந்தப் பெறுமதி $1,203 ஆகக்காணப்பட்டது. ஏறக்குறைய 17% குறைவானது. எனினும், ரொறொன்ரோவில் இந்தப் பெறுமதி 4.2% ஆகவே காணப்படுகின்றது.

2022/2023இல் குறைந்தளவு அடுக்கு மனை மாடிகளே விற்பனைக்காக சந்தைப் படுத்தப்பட்டதனால் 2026/2027 ஆண்டுகளில் சந்தைக்கு வரும் மனைகள் குறைவாக இருக்கும். இதனால் அப்பொழுது வாடகைக்கு பெறுவதில் நெருக்கடி ஏற்படும் என்பதனையும் நாம் எதிர்பார்க்கலாம்.

அத்துடன் வட்டிவீத இறக்கத்தை 2024இல் நிச்சயம் எதிர்பார்க்கலாம். இதனால் 2024ஆம் ஆண்டில் ஆதன வியாபாரம், 2023ஆம் ஆண்டைவிட நிச்சயமாக சிறப்பாக இருக்கும் என்பதனை கூற முடியும்.

## கண்ணையும்...

04ஆம் பக்கத்தொடர்ச்சி

3. தொழில் நுட்ப ரீதியில் இயங்கும் பட்டங்கள்: பல்வேறு வகையான மூல




சமையல் அறையில் பெண்கள்

வளங்களைக் கொண்டு இயங்கக்கூடிய வகையில் முப்பரிமாணத் தோற்றத்தை உடையதாக, தொழில் நுட்ப அறிவைக் கொண்டு இத்தகைய பட்டங்கள் பெரும் செலவில் தயாரிக்கப்படுகின்றன. இதில் பல்வேறு நவீன உத்திகளைக் கையாளப்படுகின்றன.

• இயங்கும் சமையல் அறை, இசைக் கச்சேரி நடத்தும் குழு, தவில், நாதஸ்வரக் குழு, மோட்டார் சைக்கிள், ஜீப், தட்டிவான், உழவு இயந்திரம் போன்ற இயங்கும் வாகனங்கள், குதிரை வண்டி, நடனக் குழுவினர், வள்ளம், குதிரைவண்டி போன்றன

தவில் நாதஸ்வரக் குழுவினர் அரசர்களின் தேர்

வள்ளத்தில் பயணம் செய்பவர்கள் சமையல் அறையில் பெண்கள்.



முருகன் பிள்ளையார்

பயணிகளை ஏற்றி இறக்கும் தட்டிவான் பட்டம் நடனக் குழுவினர்.



வள்ளத்தில் பயணம் செய்வோர்

# என்னை பாதித்த புத்தகங்கள்

# சாரு நிவேதிதா

## தொகுப்பு: கண்ணன்

'சிறந்த புத்தகங்கள் நம் சொந்த அரண்மனையில் நமக்கு தெரியாத பல அறைகளை திறக்கக்கூடிய சாவி' என்கிறார், எழுத்தாளர் காஃப்கா. அப்படி தன்னைக் கவர்ந்த, தன் வாழ்வை மாற்றிய புத்தகங்கள் பற்றி இங்கே நம்முடன் பகிர்ந்துகொள்கிறார் எழுத்தாளர் சாரு நிவேதிதா.

### நிழலற்ற பெருவெளி - தாஹர் பென் ஜெலோன்

### This Blinding Absence of Light – Tahar Ben Jelloun

என் வாழ்க்கையை மாற்றிய நூல்களில் ஒன்று இது. இதை படிப்பதற்கு முன்பு நான் ஒரு நாத்திகனாக, கடவுள் நம்பிக்கையற்றவனாக இருந்தேன். இதை படித்த பின்னர் நம்பிக்கையாளனாக மாறிவிட்டேன். இது உண்மையில் நடந்த ஒரு கதையை அடிப்படையாக கொண்டு எழுதப்பட்ட நாவல். இதை எழுதிய தாஹர் பென் ஜெலோன் ஒரு மொரோக்கோ எழுத்தாளர்.

மொரோக்கோ நாட்டில் அரசனுக்கு எதிராக ராணுவ புரட்சி நடக்கிறது. புரட்சியில் ஈடுபட்ட 20 பேரை மன்னன் ஹஸன் நிலத்துக்கு அடியில் சிறையில் அடைத்துவிடுகிறான். 5 அடி நீளமும் மூன்று அடி அகலமும் கொண்ட சவப்பெட்டி மாதிரியான ஒரு குட்டி அறை. மொரோக்கோகாரர்கள் ஆறரை அடி உயரம் இருப்பர். எனவே, சிறையில் அடைக்கப்பட்டவர்கள் எப்போதும் குனிந்த நிலையிலேயேதான் இருக்க வேண்டும். அந்த அறைக்குள்ளேயே ஒரு ஓரத்தில் இருக்கும் ஓட்டை வழியாக உணவுக்கான ரொட்டியை உள்ளே தள்ளிவிடுவார்கள். இன்னொரு பக்கம் இருக்கும் ஓட்டையில் மலம் ஜலம் கழித்துக்கொள்ள வேண்டும். வெளிச்சமே கிடையாது. அள்ளி மேலே பூசிக் கொள்ளும்படியான இருட்டு. எனவே, இருட்டில் கையை வைத்து தேடிதான் இந்த ஓட்டைகளை கண்டுபிடிக்க வேண்டும். தேள் போன்ற பூச்சிகள் கடித்தே இந்த 20 பேரில் சிலர் இறந்துவிடுகிறார்கள். சிலருக்கு பைத்தியம் பிடித்து பின்னர் அவர்களும் இறந்துவிடுகிறார்கள். ஆனால், இதையெல்லாம் கடந்து 4 பேர் எட்டு வருடங்கள் உயிரோடு இருந்தார்கள். இது மனித வரலாற்றிலேயே நம்ப முடியாத ஒரு விஷயமாக விஞ்ஞானிகளால் கருதப்பட்டது.

இந்த நால்வரில் ஒருவரை தாஹர் பென் ஜெலோன் பேட்டி கண்டு, எப்படி இவ்வளவு வருடங்களும் அவர்கள் உயிரை தக்கவைத்திருந்தார்கள் என்று எழுதியுள்ளார்.

தாஹர் பென் ஜெலோனுக்கு பேட்டி கொடுத்தவர் சொல்கிறார்: "எங்கள் நால்வருக்கும் குரான் மனப்பாடமாக தெரியும் என்பதால் ஆரம்பத்தில் இருந்தே மாறி மாறி அதை ஓதிக்கொண்டே இருந்தோம். இப்படி 24 மணி நேரமும் யாராவது ஒருவர் ஓதிக்கொண்டே இருப்போம். எத்தனை நாட்கள் ஆனது, எத்தனை வருடங்கள் போனது என்று தெரியாது."



ஆனால், இதனிடையே குறிப்பிட்ட நான்கு வருடங்களில் மெக்காவில் என்னன்ன நடந்தது, யார் யார் வந்தார்கள் என்பதை அவர் துல்லியமாக சொல்லியுள்ளார். அவர் சொன்ன கணக்குபடி பார்த்தால் அந்த நான்கு வருடங்கள் அவர்களின் உடல்தான் அந்த குட்டி அறையில் இருந்துள்ளது. ஆன்மா மெக்காவில் இருந்திருக்கிறது.

இந்த நான்கு பேரும் கடவுள் இல்லை என்று நினைத்திருந்தால் அந்த குட்டி அறையில் மற்றவர்கள் போல் செத்து போயிருப்பார்கள். கடவுள் இருக்கிறாரோ இல்லையோ அவர்கள் உயிர் வாழ்வதற்கான காரணத்தை அந்த நம்பிக்கையே தந்துள்ளது.

இந்த நூல் 'நிழலற்ற பெருவெளி' என்ற பெயரில் தமிழில் வெளிவந்துள்ளது.

### சோர்பா எனும் கிரேக்கன் - நிகோஸ் கசான்சாகிஸ்

### Zorba the Greek Paperback – Nikos Kazantzakis

மனிதர்கள் பிறக்கிறார்கள், பணம் சம்பாதிக்கிறார்கள், கல்யாணம் செய்துகொள்கிறார்கள், குழந்தைகளை பெற்று படிக்க வைக்கிறார்கள், அதன்பிறகு குழந்தைகளுக்கு ஒரு நல்ல வாழ்க்கை அமைத்துக் கொடுக்க வேண்டும் என திட்டமிடுகிறார்கள்; இப்படியே வாழ்க்கை முடிந்து இறந்தும் போய்விடுகிறார்கள்.

என்னிடம் ஒருவர் 65 வயதில், "ஒருநாள் கூட எனக்காக நான் வாழ்வில்லை. குடும்பத்துக்காகவே, மற்றவர்களுக்காகவே வாழ்ந்துவிட்டேன். சலிப்பாக இருக்கிறது, நான் சோர்ந்துவிட்டேன்' என அலுத்துக்கொண்டார்.

யார் வாழ்வை கொண்டாடுகிறார்கள்? வாழ்வை கொண்டாடுகிற ஒன்றிரண்டு பேரைத்தான் இதுவரை நான் பார்த்திருக்கிறேன். யோசித்துப் பாருங்கள், நம்மில் பெரும்பாலானோர் வாழ்க்கை கதை இதுதான். ஒருநாள் கூட நாம் நமக்காக வாழவே இல்லை.

நமக்காக வாழ்வது எப்படி, வாழ்க்கையை கொண்டாடுவது எவ்வாறு என்பதை தெரிந்துகொள்ள இந்த நூல் நிச்சயம் உதவும். இந்த நாவலின் கதை சொல்லி ஓர் எழுத்தாளன். அவன் சோர்பாவுடன் ஓர் இரவு தங்குகிறான். சோர்பா ஒரு இதிகாச நாயகன், களித்தோழன், நடனமாடி பாடலிசைத்து வாழ்க்கையை கொண்டாடும் மாபெரும் கலைஞன். அவன் வழியாக வாழ்க்கையை முற்றிலும் வேறு கோணத்தில் அறிகிறான் கதை சொல்லி. அப்போது சோர்பா சொல்லும் ஒரே வாக்கியம், "வாழ்வைக் கொண்டாடு". அவன் அன்றைய இரவை எப்படி கொண்டாடினான் என்பதை கதை சொல்லி சொல்கிறான். அதுதான் இந்த நாவல்.

உலக புகழ்பெற்ற கிரேக்க எழுத்தாளர் நிகோஸ் கசான்சாகிஸ் எழுதிய இந்த நாவல் 'சோர்பா எனும் கிரேக்கன்' என்னும் பெயரில் தமிழில் வெளி வந்துள்ளது. திரைப்படமாகவும் இது வெளிவந்துள்ளது. ஆனால், படத்தை பார்ப்பதைவிட புத்தகத்தை படிப்பதுதான் சிறந்தது.

### கசார்களின் அகராதி - மிலோராத் பாவிச்

### Dictionary of the Khazars – Milorad Pavic

அழிந்துபோனதாக கருதப்படும் லெமுரியா கண்டம் எப்படி இருந்திருக்கும் என கற்பனை செய்து எழுதினால் எப்படியிருக்கும்? அது மாதிரியான ஒரு நாவல் இது. சர்வதேச அளவில் அதிகம் விற்பனையான புத்தகங்களில் ஒன்று. 'நியூயார்க் டைம்ஸ்' 1988ஆம் வருடத்தின் சிறந்த நூல்களுள் ஒன்று என இதைக் குறிப்பிட்டுள்ளது.

அகராதி என்பது கசார்களின் கற்பனையான அறிவுப் புத்தகம். இவர்கள் ஏழு மற்றும் ஒன்பதாம் நூற்றாண்டுகளுக்கு இடையே ட்ரான்சில்வேனியாவைத் தாண்டியதொரு நிலப்பரப்பில் தழைத்திருந்த இனம். கட்டுப்பாடற்ற மூன்று மதிநுட்பமுடையவர்கள், நச்சு மையினால் அச்சிடப்பட்ட புத்தகம், முகம் பார்க்கும் கண்ணாடிகளால் நிகழும் தற்கொலை, பெரும்புனைவாய் ஓர் இளவரசி, ஒருவரின் கனவுக்குள் உட்புகுந்து செல்லக்கூடிய குறிப்பிட்டதொரு இனத்தின் பூசாரிகள், இறந்துவிட்டவர்களுக்கும் இருப்பவர்களுக்கும் இடையே உருவாகும் காதல் என இன்னும் பலவற்றை உள்ளடக்கியது இப்புதினம்.

'கசார்களின் அகராதி' என்னும் பெயரில் இந்த நூல் தமிழில் வெளிவந்துள்ளது.

### புதுமைப்பித்தன் கதைகள்

பாரதிக்குப் பிறகு தமிழையும் தமிழ் சிந்தனையையும் நவீனத்துவத்தை நோக்கி எடுத்துக்கொண்டு போனவர், புதுமைப்பித்தன். ஒருவகையில் பாரதியைவிட முக்கியமான பங்களிப்பை தமிழுக்கு செய்துள்ளவர். ஆனால், இவர் வாழ்ந்த காலகட்டத்தில் மதிக்கப்படவில்லை. 'புதுமைப்பித்தனுக்கு எழுதத் தெரியவில்லை' என்று ராஜாஜி இவரைப் பற்றி மிக மட்டமாக எழுதியுள்ளார்.

இதுதான் தமிழ் சமூகத்தின் பிரச்சினை. பாரதியையே அவர் வாழ்ந்த காலத்தில் நாம் மதிக்கவில்லையே. நோபல் பரிசு வாங்கியிருக்க வேண்டியவர். அவரை பட்டினி போட்டு கொன்றுவிட்டோம். ஆனால், அதே காலகட்டத்தில் வாழ்ந்த தாகூரை அவரது வங்காள சமூகம் கொண்டாடியது. அதனால், அவர் நோபல் பரிசு பெற்றார். 'தாகூர் இறந்தபோது மொத்த வங்காளமும் கல்கத்தாவை நோக்கி சென்றது. வங்காளத்தின் எல்லா ரயில்களும் சாந்தி நிகேதனை நோக்கி சென்றன' என அப்போது பத்திரிகையில் எழுதியிருக்கிறான். ஆனால், பாரதி இறந்தபோது 8 பேர்தான் வந்தார்கள். சில வருடங்களுக்கு முன்பு எழுத்தாளர் அசோகமித்திரன் இறந்தபோது அது 20 பேர் ஆனது. அதுவும் அவரது உறவினர்களும் நண்பர்களும்தான். எனது ஆசான் அசோகமித்திரன், சமகால தமிழ் இலக்கியத்தில் ஒரு மேதை. அவருக்கே இதுதான் நிலை.

இறப்பதற்கு முதல் நாள், 40 வயதில், உடல்நலமில்லாத நிலையில் இருந்த புதுமைப்பித்தன் இன்னொருவர் உதவியுடன் ஒரு கடிதம் எழுதுகிறார். அதில், "இந்த தமிழ் சமூகத்துக்காகவும் தமிழ் மொழிக்காவும் என் வாழ்க்கை முழுவதை

(தொடர்ச்சி 17ஆம் பக்கம்...)

MATH & PHYSICS TUTORING
By a well-qualified and experienced teacher
For all grades from Grade 4 to 1st year of university
Special classes
Advanced function
Calculus & vectors
Data management
All Classes available in Scarborough & Stouffville
Contact: 647.340.9490 / 416.732.2228


# நானிலம் போற்றும் நட்பு - 37



- அகணி -
authorakani@gmail.com

"நகைவகைய ராகிய நட்பின் பகைவரால்
பத்தடுத்த கோடி உறும்." (அதிகாரம் தீ நட்பு, குறள் 817) என்ற குறளிற்கு "அகத்தில் அன்பு இல்லாமல் புறத்தில்) நகைக்கும் தன்மை உடையவரின் நட்பை விட, பகைவரால் வருவன பத்துகோடி மடங்கு நன்மையாகும்" என்று உரையாசிரியர் மு.வரதராசனார் அவர்கள் உரை தந்துள்ளார்.

"சிரித்து விளையாடுவதற்காக மட்டுமே வரும் நண்பனைவிட பகைவரால் பத்துக்கோடி மடங்கு நன்மை கிடைக்கும்." என்று உரையாசிரியர் அருள்திரு திருக்குறள் மாமுனிவர் முனைவர் கு.மோகனராசு அவர்கள் உரை தந்துள்ளார்.

"நகைப்பதற்கு மட்டும் காரணமான நட்பைவிடப் பகைவரால் பத்துமடங்கு நன்மையுண்டாகும்." என்று உரையாசிரியர் சாமி சிதம்பரனார் அவர்கள் உரை தந்துள்ளார்.

"சிரித்துப் பேசி நடிப்பவர்களின் நட்பைக் காட்டிலும் பகைவர்களால் ஏற்படும் துன்பம் பத்துக்கோடி மடங்கு நன்மையானது என்று கருதப்படும்." என்று உரையாசிரியர் கலைஞர் அவர்கள் உரை தந்துள்ளார்.

நடித்து ஏமாற்றும் நண்பரை விட பகைவரால் பத்து மடங்கு நன்மை உண்டாகும் என்ற கருத்தை இந்தக் குறள் எடுத்துக் கூறுகிறது.

இப்பொழுது குறுந்தொகையில் வரும் முப்பத்திரண்டாவது பாடலைக் கவனிப்போம்.


இது அன்னூர் நன்முல்லையார் பாட்டு. தலைவன் தோழியிடம் தன் குறையைக் கூறினான். அவள் தலைவன் வேண்டுகோளை மறுத்தாள். 'நான் தலைவியைப் பிரிந்திருக்க மாட்டேன். அவள் பொருட்டு மடலூர்தல் அவளுக்குப் பழியுண்டாக்கும் நான் சும்மா இருந்தால் என்னால் உயிர் வாழவும் முடியாது' என்று கூறினான். இது தலைவன் கூற்று. இது குறிஞ்சித்திணை சார்ந்தது.

"காலையும் பகலும் கையது மாலையும்
ஊர்துஞ்சு யாமமும் விடியலும் என்றுஇப்
பொழுதுஇடை தெரியின் பொய்யே காமம்!
மாஎன மடலொடு மறுகில் தோன்றித்
தெற்றெனத் தூற்றலும் பழியே,
வாழ்த்தலும் பழியே பிரிவுதலை வரினே."

தலைவியின் சம்மதத்தைப் பெறுவதற்கு முதலிலே அவளுடைய உண்மையான உயிர்த் தோழியைக் கண்டான். அவளிடம் தன் குறையைக் கூறினான். எப்படியாவது உனது தலைவியை என்னை மணம் புரிந்து கொள்ளச் சம்மதிக்க வைக்க வேண்டும் என்று மன்றாடினான். அவள் இல்லாமல் நான் உயிர் வாழ முடியாது. என்னுயிரைக் காப்பாற்ற வேண்டுமானால் அது உன் தலைவியினால் தான் முடியும். உன் தலைவியின் அன்பையும் ஆதரவையும் அடைய வேண்டுமானால் உன்னுடைய உதவியில்லாமல் ஒன்றும் முடியாது. ஆகையால் நீ தான் உதவி புரிய வேண்டும் என்று கெஞ்சினான். தோழி அவன் வேண்டுகோளுக்கு இணங்கவில்லை. என் தலைவி உன்னை விரும்பமாட்டாள். ஆதலால் நீ அவளைப் பார்க்க முடியாது. பார்ப்பதற்கான வழிவகுத்துக் கொடுக்கவும் என்னால் முடியாது. நீ வந்த வழியைப் பார்த்துக் கொண்டு போகலாம் என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டாள்.

இந்தப் பாட்டின் பொருளினைக் கவனிப்போம்.
"காலைப் பொழுதும். உச்சிக் காலமும். பிரிந்த காதலர்கள் செயலற்று வருந்துவதற்குக் காரணமாகிய மாலைப் பொழுதும். ஊரார் நன்றாக மெய்ம்மறந்து உறங்குகின்ற நள்ளிரவும் விடியற்காலமும் என்னும் இந்தப் பொழுதுகளின் இடையிலே உள்ள வேற்றுமைகள் தோன்றுமாயின். இவ் வேறுபாடுகளை அறிவோர்களின் காதல் பொய்யாகும். தலைவியைப் பிரிந்திருக்கும் நிலைமை ஏற்படுமானால், குதிரை என்று சொல்லும்படி, பனை மடலின்மீது ஏறி, ஊர் வீதியே வெளிப்பட்டு, அவளைத் தூற்றும்படி செய்வதும் பழிக்கத் தகுந்ததாகும். வாழ்தலும் அவனைப் பிரிந்து வாழ்வதும் என் உயிர்க்குப் பழி விளைவிப்பதாகும்."

இப்பொழுது குறுந்தொகையில் வரும் முப்பத்தைந்தாவது பாடலைக் கவனிப்போம்.
இப்பாடல் கழார்க்கீரன் எயிற்றி என்பவரால் பாடப்பட்டது. தலைவன் பிரிவை நினைத்து அழுத தலைவி தன் தோழியினிடம், தான் அழுவதற்கான காரணத்தைக் கூறியது. இது மருதத்திணை சார்ந்தது.



"நாண்இல மன்றஎம் கண்ணே, நாள்நேர்பு
சினைப்பசும் பாம்பின் சூல்முதிர்ப்பு அன்ன
கனைத்த கரும்பின் கூம்புபொதி அவிழ
நுண்உரை அழிதுளி தலைஇய
தண்வரல் வாடையும் பிரிந்திசினோர்க்கு அழலே."
இந்தப் பாட்டின் பொருளினைக் கவனிப்போம்.

தோழியே! தலைவர் பிரிந்து போனபோது அதற்குச் சம்மதம் தெரிவித்து விட்டு, கருக்கொண்ட பச்சைப் பாம்பின், கர்ப்பத்தின் நிறைவைப் போல, திரண்ட கரும்பினது, குவிந்திருக்கின்ற அரும்புகள் மலரும்படி, சிறந்த மழை பொழிந்து, அழிகின்ற துளிகளும், குளிர்ச்சி தருகின்ற வாடைக் காற்றும், நம்மை விட்டுப் பிரிந்திருக்கும். தலைவரை நினைத்து, அழுவதைச் செய்வதால், எம் கண்கள், நிச்சயமாக வெட்கங் கெட்டவை.

தலைவன் பொருள் தேடச் செல்வதற்கு எண்ணினான். தலைவியின் உடன்பாட்டைப் பெற்ற பின்புதான் போக வேண்டும் என்பது அவன் முடிவு. அவள் சம்மதமில்லாமல் போனால் தன் எண்ணமும் வெற்றியடையாது. தலைவியும் தவித்துக் கொண்டிருப்பாள். ஊராரும் தன் இரக்கமற்ற தன்மையைக் கண்டு பழி கூறுவார்கள் என்பது அவனுக்குத் தெரியும்.

தான் பொருள் தேடப் போவதற்கு எண்ணியிருப்பதை அவன் தன் தலைவியிடம் மிகவும் நயமாக வெளியிட்டான். செல்வம் இல்லாதவர்க்கு இவ்வுலகிலே இன்பம் இல்லை செல்வம் இருந்தால்தான் இல்லற வாழ்க்கையை இனிதாக நடத்தலாம் செல்வமிருந்தால் நமது இளமைப் பருவமும் நமக்கு இன்பம் தரும் வறுமை நமது வாழ்வைக் கெடுத்துவிடும். ஆதலால் செல்வம் சேர்த்துக் கொண்டு விரைவில் வந்து விடுகிறேன். குளிர்காலம் வருவதற்கு முன் திரும்பி விடுவேன். அறிவுள்ள நீ அது வரையிலும் தனிமையைத் தாங்கியிருக்கத் துணிவு கொள்ளுவாய் என்று நம்புகிறேன் என்று மிகவும் நயமாகப் பேசினான்.

தலைவியும் தலைவன் கூற்றிலே உண்மையிருப்பதைக் கண்டு உள்ளம் இரங்கினாள். தலைவன் பிரிந்து செல்வதைத் தடுக்க விரும்பவில்லை. மகிழ்ச்சியோடு அவன் பிரிந்து போவதற்கு விடையளித்தாள்.

இப்பொழுது குறுந்தொகையில் வரும் முப்பத்தாறாவது பாடலைக் கவனிப்போம்.

இது பரணர் பாட்டு. தலைவியை மணந்துகொள்ளும் பொருட்டுப் பொருள் தேடப் பிரிந்து சென்றான் தலைவன். அப்பிரிவால் தலைவி வருந்துகின்றாள். அதனால் கவலைப்பட்டாள் தோழி. அத்தோழிக்குத் தலைவி கூறியது இப்பாடல். குறிஞ்சித்திணை சார்ந்தது.

"துறுகல் அயலது மாணை மாக்கொடி
துஞ்சுகளிறு இவரும், குன்ற நாடன்
நெஞ்சு களன்ஆக நீ அலன் யான்என
நற்றோள் மணந்த ஞான்றை, மற்றவன்
தாவா வஞ்சினம் உரைத்தது,
நோயோ தோழி நின் வயினானே."

இந்தப் பாடலுக்கான பொருளினைக் கவனிப்போம்.
தோழியே. உருண்டைக் கற்களின் பக்கத்திலே உள்ளதாகிய, மாணை என்னும் பெரிய கொடி, அதன் பக்கத்திலே படுத்துறங்கும் யானைமீது படரும். குன்ற நாடன் குன்றுகளையுடைய நாட்டின் தலைவன். உன் நெஞ்சையே இடமாகக் கொண்டிருந்து. உன்னை விட்டுப் பிரியாமல் இருப்பேன் நான் என்று. என்னுடைய அழகிய தோளைத் தழுவியகாலத்தில், அத்தலைவன், தாவா கெடாத சூளுரைத்த செய்தி எனக்குத்தான் இன்று துன்பம் தரும். நின் வயினான் நோயோ உனக்கும் அது துன்பம் தருகின்றதோ.

ஒரு தலைவனும் தலைவியும் காதல் மணம் புரிந்து கொண்டனர். அவர்களுடைய காதல் மணச் செய்தியை ஆரும் அறிய மாட்டார்கள். தலைவியின் தோழிக்கு மட்டுந்தான் தெரியும், இவர்களுடைய காதல் மணவாழ்வு பல நாட்கள், பல வாரங்கள், பல மாதங்கள் என்று வளர்ந்து கொண்டே போயிற்று. மேலும் களவுக் காதல் மண வாழ்விலேயே காலங் கடத்தத் தோழிக்கு விருப்பம் இல்லை. தலைவிக்கும் எண்ணம் இல்லை, தலைவனும் விரைவில் கற்பு மணம் புரிந்து கொள்ளவே விரும்பினான்.

தலைவன் தலைவியை மணந்து கொள்வதற்கு முன் பொருள் தேடப் புறப்பட்டான். தலைவிக்குப் பல ஆறுதல் உரைகளைக் கூறினான்.

தலைவன் இன்னும் வரவில்லையே என்று

(தொடர்ச்சி 11ஆம் பக்கம்...)


சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்: காலை 7am - மாலை 9pm
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416.754.7338 / 416.724.7480
3011 Markham Road, Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

# வாழ்க்கையை காதலிப்போம்




வாழவேண்டும், வாழமுடியும் என்ற வாழ்வதற்கான ஆவல்தான் வாழ்க்கை. வாழ்க்கை என்பது சேகரிப்பது அல்ல. வாழ்ந்து அனுபவிப்பது. மற்றவர் போல் வாழ நினைத்து வருந்தி வாழ்வதல்ல வாழ்க்கை. வாழும்நாளை பயனுடையதாக்க நாம் வாழக்கற்க வேண்டும். ஏதோ வாழ்கிறோம் என்று வாழாது, ஏனோ தானோ என்றும் வாழாது இப்படித்தான் வாழவேண்டும் என்று வாழவேண்டும். சமூகத்துக்கும் நீங்கள் பதில் சொல்லக் கூடிய வகையில் வாழ வேண்டும். வாழ்க்கை நமக்கானது என நினைத்து வாழுங்கள். உடலால் வாழ்வதுதான் வாழ்க்கையல்ல. மனதால் வாழ வேண்டும். அதாவது, கணவன், மனைவி ஒருவரை ஒருவர் மனதால் சுமக்க வேண்டும். நெருங்கிப்பழகி பரிவுடன், பாசத்துடன் உள்ளத்தையும் அன்பையும் பகிர்ந்துகொள்வதால் உருவாகும் உறவுதான் காதல். இது வெறும் காதல் அல்ல. உண்மையான காதல். வாழ்க்கையை சிறப்பாக வாழ்வதற்கு காதல் மிகவும் அவசியம். ஒருவர் மனதை மற்றவர் அறிந்தும், புரிந்தும் வாழ்வதுதான் காதல் வாழ்க்கை. மணவாழ்க்கை வலுப்பட மனங்களில் காதல்ப்பிணைப்பு இணைபிரியாப் பிணைப்பாக இருப்பது அவசியம். இது உயிரினும் மேலான அன்பைப் பரிமாற உறுதுணையாக அமையும். அகத்தைச் சார்ந்த எழுச்சிகள் ஏற்படுகின்றபோதுதான் ஒரு மனிதன் உத்வேகம் கொள்கிறான். உற்சாகமடைகிறான்.

கணவன், மனைவி இருவரும் பரிமாறும் அன்பின் வெளிப்பாடே காதல். உயிர்ப்புடனான காதலை அடிக்கடி பகிர்ந்து கொள்வது மகிழ்வான மணவாழ்க்கைக்கு உறுதுணையாகும். ஒருவருக்கு ஒருவர் துணையாக முழுமையான புரிந்துணர்வுடன் காலம் முழுவதும் இணைந்து வாழ்தலே இல்லறத்தின் அடிநாதமாகும். காதல் இல்லாத வாழ்வியல் வெறும் உடல்கள் மட்டும் இணைந்த வாழ்வாக அமைந்துவிடும். திருமணம் புனித உறவாக இருப்பதற்குக் கணவன், மனைவி இருவரும் போலியற்ற காதலுடன் வாழவேண்டும். காதல் வாழ்வென்பது இன்று தொடங்கியதொன்றல்ல. சங்க காலத்தில் வாழ்ந்த மக்கள் காதல் வாழ்க்கையையும், இல்லற வாழ்க்கையையும் இனிமையாக வாழ்ந்தனர் என்பதற்கு குறுந்தொகை நூல் சான்றாகும். குறுந்தொகைப் பாடல்கள் பழமையாக இருந்தாலும் இன்றைக்கும் எமது வாழ்க்கைக்கு வழிகாட்டிக் கொண்டிருக்கின்றன.

உண்மையான அன்புக்கு எது எல்லை? எல்லை கடந்த அன்பின் ஆழத்தில் தானே காதல் இன்பமும் இருக்கின்றதெனக் குறுந்தொகைப் பாடல்கள் எடுத்தியம்புகின்றன. வம்பு என்பது புல் மாதிரி எதுவும் போடாமலே முளைக்கும். ஆனால் அன்பு என்பது நெல் மாதிரி. போட்டால்தான் முளைக்கும்.

